## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி

**அசல் வழக்கு எண்.** 77/2024

**வாக்குமூலம்.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமநாதன் | தொழில் | |
| த/பெ. | மாணிக்கம் | வயது | 45 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 27.10.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தாவா வழக்கில் வாதி என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபணவாக்குமூலத்தை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்கவேண்டுகிறேன். அதில்லுள்ள கையெழுத்து என்னுடையது தான் தாவா கோவில் அமைந்துள்ள சொத்துக்கான பட்டா அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா கோவிலுக்கான வரைபடம் அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.01.1975ஆம் தேதி தாவா கோவிலுக்கு மாணிக்கம் கோனார் எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா கோவிலுக்கான பட்டா எண் 227 படியான கணினி சிட்டா கணினி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா–ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா கோவிலுக்கு என் பெயரில் கடந்த 06.04.2024ஆம் தேதி செலுத்தப்பட்ட மின்கட்டண ரசீது அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா கோவிலுக்கு கடந்த 28.06.2007ஆம் தேதி நடைபெற்ற கும்பாவிசேசத்திற்கான அழைப்பிதல் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.தாவா கோவிலுக்கு கடந்த 29.04.2021ஆம் தேதி நடைபெற்ற கும்பாவிசேசத்திற்கான அழைப்பிதல் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கடந்த 10.09.2021ஆம் தேதியல் தாவா கோவில் விநாயகர் சதுர்த்தி விழா நடத்தியதற்கான அழைப்பிதல் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ– 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கடந்த 31.08.2022ஆம் தேதியல் தாவா கோவில் விநாயகர் சதுர்த்தி விழா நடத்தியதற்கான அழைப்பிதல் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ– 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கடந்த 18.09.2023ஆம் தேதியல் தாவா கோவில் விநாயகர் சதுர்த்தி விழா நடத்தியதற்கான

அழைப்பிதல் அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ–10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா கோவிலில் பணிபுரியும் அர்சகர்களுக்கு சம்பளம் கொடுத்ததற்கு அவர்கள் கொடுத்த ரசீதுகள் அடங்கிய நோட்டு அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா கோவிலில் SS கம்பி வேலை செய்ததற்கான 04.09.2021 தேதிய ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா–ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 20.08.2021 தேதிய தாவா கோவிலில் சுற்றி அடைப்பு செட் அமைப்பதற்கான ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.05.1974 தேதிய டிரஸ்டி முறையில் கருப்பையா கோனார் மற்றும் செயாலர்களான சோமசுந்தரம் தேவர், நாகலிங்கம் கோனார், கருப்பையா அம்பளம் ஆகியோர்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பதிவு செய்யப்படாத பொது அதிகார ஆவணம் அசல் தாக்கல் செய்கிறேன் அது வா.சா.ஆ– 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**